தமிழ்
adda247

மார்ச் மாத பதிப்பு

# வெற்றி ADDA247 தமிழ்நாடு மாதாந்திர நடப்புநிகழ்வுகள்தமிழில் 2022

**TNPSC Group 1, TNPSC Group 2/2A, TNPSC Group 3 & 4, TNUSRB, TNFUSRC, IBPS, SSC, IBPS RRB, SBI, RRB மேலும் பல**


நீர் மேலாண்மையில் தேசிய அளவில் தமிழ்நாடு 3 வது இடம் பெற்றுள்ளது

தமிழகம் உட்பட 5 மாநிலங்களுக்கு பேரிடர் கூடுதல் நிதி ரூ. 1,682 கோடி

சென்னை சென்ட்ரலில் மத்திய சதுக்கம் திறந்து வைத்த முதல்வர்

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக கீதாலட்சுமி நியமனம் - ஆளுநர் ஆர். என். ரவி உத்தரவு

தமிழ் நாடு மாநில சுகாதாரப் பேரவையை தமிழக முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார்





- Adda247 APPல் தமிழ்நாடு மாநில தேர்வு பிரிவில் பயின்றிடுங்கள்
- கிளிக் செய்க
- தேர்ந்திடு வென்றிடு

# Tamilnadu Monthly Current Affairs PDF in Tamil | March 2022

*நடப்பு விவகாரங்கள் TNPSC குரூப் 1, TNPSC குரூப் 2/2A, TNPSC குரூப் 4, TNUSRB, TNFUSRC, IBPS, SSC, IB அல்லது BIS தேர்வுகளுக்கான தலைப்புச் செய்தி*

**இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டுத் திட்டத்தை முதல்வர் மு.க. ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.**

- ❖ *சென்னை, கலை வாணர் அரங்கில் 'நான் முதல்வன் - உலகை வெல்லும் இளைய தமிழகம்' என்ற பள்ளி, கல்லூரி மாணவர்கள் இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டுத் திட்டத்தை முதல்வர் மு.க. ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.*
- ❖ *தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் வாயிலாக கிளவ்டு கம்ப்யூட்டிங், செயற்கை நுண்ணறிவு உள்ளிட்டவற்றில் பயிற்சி வழங்கப்படுகிறது.*
- ❖ *மாணவர்களுக்கு ஜப்பான், சீன, ரஷ்ய, பிரெஞ்ச் மொழிகளும் கற்றுக் கொடுக்கப்படுகிறது.*

**ஆதிச்ச நல்லூர் அகழாய்வில் மூன்று கால கட்டங்களை உள்ளடக்கிய 52 முது மக்கள் தாழிகள் கண்டறியப்பட்டு உள்ளன**

- ❖ *ஆதிச்ச நல்லூர் அகழாய்வில் மூன்று கால கட்டங்களை உள்ளடக்கிய 52 முதுமக்கள் தாழிகள் கண்டறியப்பட்டு உள்ளதாக, மத்திய தொல்லியல் துறை தெரிவித்துள்ளது.*
- ❖ *தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் அருகேயுள்ள ஆதிச்ச நல்லூரில் உலகத் தரம் வாய்ந்த அருங்காட்சியகம் அமைக்கப்படும் என மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் 2020 ஆம் ஆண்டு அறிவித்திருந்தார்.*

**தமிழகம் உட்பட 5 மாநிலங்களுக்கு பேரிடர் கூடுதல் நிதி ரூ. 1,682 கோடி**

- ❖ *தமிழகம், ஆந்திரா, ஹிமாச்சல பிரதேசம், கர்நாடகா, மஹாராஷ்டிரா ஆகிய 5 மாநிலங்களுக்கு, 1,664.25 கோடி ரூபாயும், புதுச்சேரி யூனியன் பிரதேசத்துக்கு 17.86 கோடி ரூபாயும் மத்திய அரசு தருகிறது.*
- ❖ *இந்த நிதியை தேசிய பேரிடர் நிவாரண நிதியில் இருந்து கூடுதலாக வழங்க, உள் துறை அமைச்சர் அமித் ஷா தலைமையில் நடந்த உயர்நிலைக் குழு கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டு உள்ளது.*
    - *ஆந்திராவுக்கு 351.43;*
    - *ஹிமாச்சல் 112.19;*
    - *கர்நாடகா 492.39;*
    - *மஹாராஷ்டிரா 355.39;*
    - *தமிழகத்துக்கு 352.85 கோடி ரூபாய் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.*
    - *புதுச்சேரிக்கு 17.86 கோடி ரூபாய் வழங்கப்படுகிறது.*

**தமிழக அரசின் *2022 – 23* - ம் நிதி ஆண்டுக்கான பட்ஜெட் முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமையில் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல்.**

- ❖ *தமிழக அரசின் 2022 – 23 -ம் நிதி ஆண்டுக்கான பட்ஜெட் விரைவில் தாக்கல் செய்யப்படவுள்ளது.*
- ❖ *முதல் நாள் பொது பட்ஜெட்டும், மறுநாள் வேளாண் துறைக்கான தனி பட்ஜெட்டும் தாக்கல் செய்யப்படும்.*
- ❖ *கடந்தாண்டு போல இந்தாண்டும் காகிதமில்லா பட்ஜெட் மின்னணு வடிவில் தாக்கல் செய்யப்படுகிறது.*



❖ திமுக தேர்தல் அறிக்கையில் கூறப்பட்டு இதுவரை நிறைவேற்றப்படாத முக்கிய திட்டங்கள் இந்த பட்ஜெட்டில் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அந்த திட்டங்கள் அடங்கிய பட்ஜெட்டுக்கு ஒப்புதல் அளிப்பதற்கான அமைச்சரவைக் கூட்டம் முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமையில் தலைமை செயலகத்தில் நடைபெற்றது.

❖ இதில், அமைச்சர்கள், தலைமைச் செயலர், நிதி, தொழில் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் செயலர்கள் பங்கேற்றனர். இதில் 2022 – 23 -ம் ஆண்டுக்கான பொது பட்ஜெட் மற்றும் வேளாண் பட்ஜெட்டுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

**உக்ரைனில் சிக்கி தவிக்கும் தமிழக மாணவர்களை மீட்க ரூ.3.5 கோடி நிதி ஒதுக்கி தமிழ்நாடு அரசு அரசாணை**

❖ உக்ரைனில் சிக்கி தவிக்கும் தமிழக மாணவர்களை மீட்க ரூ.3.5 கோடி நிதி ஒதுக்கி தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

❖ வெளிநாடு வாழ் தமிழர் நல ஆணையத்தின் நிதியை பயன்படுத்த முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

❖ 35 மாணவர்களை போர் பகுதியில் இருந்து அண்டை நாட்டிற்கு அழைத்து வர பேருந்து கட்டணமாக சுமார் ரூ.14 லட்சத்தை (17,500 டாலர்) மாநில அரசு செலுத்தியுள்ளதாக தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.

**அரியலூர் மாளிகை மேடு அகழ்வாராய்ச்சியில் சோழ மன்னர்கள் அரண்மனையின் சுற்றுச் சுவர்கள், தங்க காப்பு கண்டுபிடிப்பு**

❖ அரியலூர் மாவட்டம் கங்கை கொண்ட சோழ புரம் அருகே உட்கோட்டை கிராமத்தில் உள்ள, சோழப் பேரரசரான முதலாம் ராஜேந்திர சோழன் மற்றும் அவருக்கு பின்னால் ஆண்ட சோழ மன்னர்களின் அரண்மனை இருந்ததாக கூறப்படும் மாளிகை மேடு பகுதியில் தமிழக தொல்லியல் துறை மூலம் கடந்த ஆண்டு மார்ச் மாதம் முதற்கட்ட அகழாய்வு பணிகள் தொடங்கி நடைபெற்றன.

❖ இந்த பணியின் போது கூரை ஓடுகள், பானை ஓடுகள், சிவப்பு மற்றும் கருப்ப நிறத்தினாலான ஓடுகள், இரும்பினாலான ஆணிகள், சீன கலை நயமிக்க மணிகள் போன்ற பொருட்கள், பானை விளிம்புகள், சிறிய அளவிலான அரிய பொருட்கள், கட்டிடங்கள் இருந்ததற்கான எச்சங்கள் கிடைத்தன.

❖ மேலும் முதலாம் ராஜேந்திர சோழனால் கட்டப்பட்ட அரண்மனையின் ஒரு பாகத்தின் சுற்றுச்சுவரும், பின்னர் அரண்மனையின் தொடர்ச்சியாக 2வது பாகமும் கண்டறியப்பட்டது. வடிகால் அமைப்பு போன்ற சுவர் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து தற்போது 10 க்கு 10 என்ற சதுர அடி அளவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

❖ இதில் அரண்மனையின் சுற்றுச் சுவர்கள், இரும்பினாலான ஆணிகள், மண் பாண்ட விளிம்புகள் போன்றவை கிடைத்துள்ளன.

❖ கையில் அணியும் காப்பு போன்ற தங்கத்தினாலான காப்பு ஒன்று தற்போது கிடைத்துள்ளது. இந்த காப்ப சுமார் 7.920 கிராம் எடை கொண்டதாக உள்ளது. இதன் நீளம் 4.9 மி. மீட்டரும், அதன் நடுவில் அமைந்துள்ள தடிமனான பகுதியின் அளவு 4 மி. மீட்டர் என்ற அளவிலும் உள்ளது.

**72 ஏக்கரில் சுண்ணாம்புக் கல் சுரங்கத்தில் அமைக்கப்பட்டுள்ள பல்லுயிர் பெருக்க சூழலியல் பூங்கா முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார்**

❖ சிமெண்ட் தயாரிக்கத் தேவையான மூலப் பொருட்களில் ஒன்றான சுண்ணாம்புக் கல்லை விருது நகர் மாவட்டம் அருப்புக் கோட்டை அருகே உள்ள பந்தல் குடி கிராமத்தில் ராம்கோ நிறுவனம் எடுத்து வருகிறது. தற்போது 60 மீட்டர் ஆழம் வரை சென்றுள்ளது.

❖ அப்பகுதி மக்கள் மற்றும் சுற்றுப்புறச் சூழலைக் கருத்தில் கொண்டு அச்சுரங்கத்தை அப்படியே கைவிடாமல் ராம்கோ நிறுவனம் புதிய முயற்சியாக ரூ.5.20 கோடி மதிப்பில் மறுசீரமைப்பு செய்துள்ளது.

- இந்தச் சுற்றுச்சூழல் பூங்காவில் நீர்நிலைப் பாதை, வறண்ட நிலத் தாவரங்கள், கற்றாழை அடினியம் தோட்டம், பந்தல் பூங்கா, புல்வெளி, கல் பூங்கா என பிரிக்கப்பட்டு பொதுமக்கள் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இப்பூங்காவின் சுரங்கத்தில் உள்ள தேவையற்ற கற்கள் மற்றும் உள்ளூர் செடிகளால் உருவாக்கப்பட்டுள்ள கல் பூங்கா, நடைபாதை, 40 ஏக்கர் பரப்பளவில் அடர்வனம் (மியாவாக்கி) ஆகியவையும் அமைக்கப்பட்டுள்ளன.
- மேலும் விலங்குகளின் பல்லுயிர் ஆதாரங்களை உருவாக்கும் வகையில் நீர்நிலைப் பாதை, வறண்ட நிலத்தில் வளரும் தாவரங்கள், 200 வகையான மரங்கள், மூலிகைத் தாவரங்கள் நட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.
- இங்கு ஆயிரக்கணக்கான பறவைகள், வண்ணத்துப் பூச்சிகள். நுண்ணுயிரிகள் வசிக்கத் தொடங்கியுள்ளதால் இப்பூங்கா குறுங்காடு போல் காட்சியளிக்கிறது.
- 2023 - ம் ஆண்டு முடிவில் 5 லட்சம் நாட்டு மரக்கன்றுகள் 400 ஏக்கர் பரப்பளவில் நடத் திட்டமிடப்பட்டுள்ளது. இப்பூங்கா திறப்பு விழா பந்தல் குடியில் நேற்று மாலை நடைபெற்றது.
- விருதுநகர் மாவட்ட ஆட்சியர் ஜெ. மேகநாத ரெட்டி தலைமை வகித்தார். வருவாய்த் துறை அமைச்சர் சாத்தூர் ராமச் சந்திரன், தொழில் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் முன்னிலை வகித்தனர். முதல்வர் ஸ்டாலின் சுற்றுச் சூழல் பூங்காவை திறந்து வைத்துப் பார்வையிட்டார்.




### ரூ. 1,000 கோடியில் சர்வதேச பர்னிச்சர் பூங்கா முதல் அமைச்சர் அடிக்கல் நாட்டினார்

- தூத்துக்குடி சிப்காட் தொழில் பேட்டை வளாகத்தில் 1,156 ஏக்கர் பரப்பளவில் ரூ. 1,000 கோடியில் சர்வதேச அறை கலன் பூங்கா அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா நடந்தது. விழாவுக்கு தமிழக தொழில் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தலைமை தாங்கினார்.

### ரூ. 4,755 கோடியில் புதிய தொழில்கள் தொடங்க 33 புரிந்துணர்வு ஒப்பந்தம்

- தூத்துக்குடியில் அறை கலன் பூங்கா அடிக்கல் நாட்டு விழா நடந்தது. அப்போது அந்த பூங்காவில் தொழில் தொடங்குவதற்காக 8 நிறுவனங்களுடன் ரூ.2 ஆயிரத்து 845 கோடி முதலீட்டுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டது.
- இது தவிர தென் மாவட்டங்களில் தொழில் வளர்ச்சியை பெருக்கவும், வேலை வாய்ப்பை உருவாக்கவும் முதல் - அமைச்சர் மு.க. ஸ்டாலின் முன்னிலையில் ரூ. 1,910 கோடி முதலீட்டில் புதிய தொழில்கள் தொடங்க 25 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தானது.
- தொழில் துறை சார்பில் ரூ. 1,643 கோடி முதலீடு மற்றும் 3 ஆயிரத்து 653 பேருக்கு புதிய வேலைவாய்ப்பை உருவாக்கும் வகையில் 6 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, அதிகாரிகள் மற்றும் நிறுவன பிரதிநிதிகள் ஒப்பந்த நகல்களை பரிமாறிக்கொண்டனர்.
- இதே போன்று குறு, சிறு, நடுத்தர நிறுவனங்கள் தொழில் துறை சார்பில் ரூ.267 கோடி முதலீடு மற்றும் 2 ஆயிரத்து 373 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் வகையில் 19 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு அதிகாரிகள் மற்றும் நிறுவன பிரதிநிதிகள் ஒப்பந்த நகல்களை பரிமாறிக்கொண்டனர்.
- இதன் மூலம் நடந்த விழாவில் மொத்தம் ரூ.4 ஆயிரத்து 755 கோடி முதலீடும், 17 ஆயிரத்து 476 பேருக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும் வகையில் 33 திட்டங்களுக்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

**மிதக்கும் சூரிய மின் சக்தி நிலையத்தை திறந்து வைத்த முதலமைச்சர் மு.க. ஸ்டாலின்**

- தூத்துக்குடி முத்தையாபுரத்தில் செயல்பட்டு வரும் Spic தனியார் உரத் தொழிற்சாலையின் பயன்பாட்டுக்காக ரூ.150.4 கோடி செலவில் 75 ஏக்கரில் அமைக்கப்பட்டுள்ள மிதக்கும் சோலார் உற்பத்தி நிலையத்தை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் திறந்து வைத்தார்.
- தினமும் 22 மெகா வாட் என ஆண்டுக்கு 42 மி. யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்யும் திறனுடையது மின் நிலையம் என்று கூறப்படுகிறது.
- உற்பத்தியாகும் அனைத்து மின்சாரமும் ஸ்பிக், க்ரீன் ஸ்டார் உரங்களின் உற்பத்திக்காக பயன்படுத்தப்பட உள்ளது.

**ஸ்ரீபெரும்புதூர் செயின்ட் கோபைன் நிறுவன வளாகத்தில் ரூ.500 கோடி மதிப்பில் மிதவை கண்ணாடி பிரிவு முதல்வர் மு.க. ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.**

- 1998 ல் பெரும்புதூர் தொழில் வளாகத்தில் செயின்ட் கோபைன் நிறுவனத்துக்கு அடிக்கல் நாட்டி வைத்த முன்னாள் முதல்வர் கருணாநிதி 2000 -ம் ஆண்டில் உற்பத்தியை தொடங்கிவைத்தார்.
- இங்கு, முகம் பார்க்கும் கண்ணாடி, சூரிய ஆற்றல் கண்ணாடி, லாக்வேர்டு கண்ணாடி, இன்சுலேட்டட் கண்ணாடி, மேற்பூச்சுள்ள கண்ணாடி, பாதுகாப்பு கண்ணாடி, தீப்பிடிக்காத, குண்டு துளைக்காத, வெடி குண்டு தாக்குதலை சமாளிக்கும் வகையிலான கண்ணாடி உள்ளிட்டவை தயாரிக்கப்படுகின்றன. மேலும், மதிப்புக் கூட்டப்பட்ட கண்ணாடிகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.
- இந்நிலையில், இந்த வளாகத்தில் ரூ.500 கோடி மதிப்பில், 200 பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கும் வகையில் மிதவை கண்ணாடிப் பிரிவு, ஒருங்கிணைந்த ஜன்னல் பிரிவு மற்றும் நகர்ப்புற வனம் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன. இவற்றை முதல்வர் மு.க. ஸ்டாலின் தொடங்கி வைத்தார். இந்த மிதவைக் கண்ணாடிப் பிரிவு அதிக பட்ச உற்பத்தி, நவீனத் தொழில் நுட்பம், பிரத்யேக வடிவமைப்பு ஆகிய சிறப்புத் தன்மைகளை உள்ளடக்கியது.

**மாற்றுத்திறனாளிகளுக்காக சிறப்பாக செயல்பட்ட சிவகங்கை ஆட்சியருக்கு முதல்வர் விருது**

- சிவகங்கையில் குடிசை மாற்று வாரியம் மூலம் கட்டப்பட்ட குடியிருப்பில் தலா ரூ.10 லட்சம் மதிப்புள்ள வீட்டை ரூ.1.5 லட்சத்துக்கு 150 மாற்றுத் திறனாளிகளுக்கு ஒதுக்க மாவட்ட ஆட்சியர் பி. மதுசூதன் ரெட்டி நடவடிக்கை எடுத்தார்.
- அதே போல் மாநிலத்திலேயே முதன் முறையாக இளையான் குடி அருகே கீழாயூர் பகுதியில் வீடற்ற 130 மாற்றுத் திறனாளிகளுக்கு தலா 2 சென்ட் வீதம் இலவச வீட்டுமனை பட்டா வழங்க 5 ஏக்கர் நிலம் ஒதுக்கியது.
- மேலும் அப்பகுதியில் பள்ளி, ரேஷன் கடை போன்ற வசதிகளும் செய்து கொடுக்கப்பட உள்ளன.
- மாவட்டத்தில் தேசிய ஊன முற்றோர் அடையாள அட்டைகளை அதிகளவில் வழங்கியது.
- மாற்றுத் திறனாளிகளுக்கு அதிக அளவில் முகாம்களை நடத்தி ஏராளமானோருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கியது போன்றவற்றில் மாவட்ட ஆட்சியர் சிறப்பாகச் செயல்பட்டார்.
- இதையடுத்து அவருக்கு 2021- ம் ஆண்டுக்கு மாற்றுத் திறனாளிகளுக்காக சிறப்பாக செயல்பட்ட ஆட்சியருக்கான விருது கிடைத்துள்ளது.



**பள்ளிகளில் தொழில் நுட்ப தர மேம்பாட்டுக்காக காக்னிசன்ட் நிறுவனத்துடன் கல்வித் துறை ஒப்பந்தம்**

- அரசுப் பள்ளிகளில் தொழில் நுட்பக் கட்டமைப்பை வலுப்படுத்தவும், தொழில் நுட்பக் கற்றல் வளங்களை பள்ளிகளில் எளிய வகையில் உருவாக்கவும், தொழில் நுட்ப மற்றும் கணினி மயமான பள்ளிகளில் ஆசிரியர்களின் தொழில் நுட்பத் திறனை மேம்படுத்தவும், தமிழக பள்ளிக் கல்வித் துறை, காக்னிசன்ட் நிறுவனம் இணைந்து, பள்ளிகளில் தொழில் நுட்பத் தர மேம்பாட்டுக்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளன.
- முதல்வர் ஸ்டாலின் முன்னிலையில் இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இதன் மூலம், கணினி மயக் கற்றல் மேம்பாட்டு திட்டத்தின் அறிவு சார் பங்குதாரராக காக்னிசன்ட் நிறுவனம் செயல்படும்

**சென்னை அருகே குரோம் பேட்டையில் ரேலா இன்ஸ்டிடியூட் புற்று நோய் மையம் மு.க. ஸ்டாலின் திறந்து வைத்தார்.**

- சென்னை அருகே குரோம் பேட்டையில் புதிதாக ரேலா இன்ஸ்டிடியூட் புற்று நோய் மையம் கட்டப்பட்டுள்ளது. இதில் முதல்வர் மு.க. ஸ்டாலின் கலந்து கொண்டு, புற்று நோய் மையத்தை திறந்து வைத்தார். தொடர்ந்து, அந்த மையத்தை முதல்வர் பார்வையிட்டார்.

**ரூ.5000 கோடியில் தரமணியில் உலகளாவிய வளாகம்: முதல்வர் மு.க. ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்**

- டிஎல்எஃப் டௌன்டவுன் தரமணியில் 'ஸ்டாண்டர்டு சார்ட்டர்டு குளோபல் பிசினஸ் சர்வீசஸ்'ன் மிகப் பெரிய உலகளாவிய வளாகத்திற்கு தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்.
- டிட்கோவின் 50 கோடி ரூபாய் முதலீட்டு பங்குடன் மேற்கொள்ளும் இந்த கூட்டு முயற்சி செயல் திட்டத்தில், இந்த ஐடி மற்றும் ஐடிஇஎஸ் பூங்காவானது 6.8 மில்லியன் சதுர அடி பரப்பில், 27 ஏக்கர் நிலப் பரப்பில் அமையவுள்ளது.
- 5000 கோடி ரூபாய் முதலீட்டைக் கொண்டிருக்கும் இந்த செயல் திட்டத்தில், டிஎல்எஃப் நிறுவனம் இத்தொகையை படிப்படியாக தேவைப்படும் கால கட்டங்களில் முதலீடு செய்யும்.

**ஸ்ரீபெரும்புதூரில் ரூ. 1,588 கோடியில் சாம்சங் கம்ப்ரசர் ஆலை**

- பெரும்புதூரில் ரூ. 1,588 கோடியில் 600 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் காற்றழுத்த கருவிகள் (கம்ப்ரசர்) உற்பத்தி திட்டத்தை சாம்சங் நிறுவனம் நிறுவுகிறது. இதுதொடர்பாக தமிழக அரசு - சாம்சங் நிறுவனம் இடையே முதல்வர் ஸ்டாலின் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.
- கடந்த 2006 - ல் பெரும்புதூரில் சாம்சங் நிறுவனம் ரூ.450 கோடி முதலீட்டில் 2,500 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில், வண்ணத் தொலைக்காட்சி பெட்டிகள், கணினித் திரைகள், குளிர் சாதனம், குளிரூட்டிகள், சலவை இயந்திரங்கள் தயாரிக்கும் ஆலையை அமைத்தது.
- இந்த ஆலையை 2007 நவ.13-ம் தேதி அப்போதைய முதல்வர் கருணாநிதி திறந்து வைத்தார். இந்நிலையில், தற்போது அடுத்த கட்ட ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது.
- இந்த ஆண்டின் இறுதிக்குள் ஆண்டுக்கு 80 லட்சம் கம்ப்ரசர்கள் உற்பத்தி செய்யவும், 2024 இறுதிக்குள் 1.44 கோடி உற்பத்தியை எட்டவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**21 தமிழறிஞர்களுக்கு விருது - முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வழங்கினார்**

- தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் 2022 ம் ஆண்டுக்கான விருதுகள் வழங்கும் நிகழ்ச்சி சென்னை கலைவாணர் அரங்கல் நடைபெற்றது.
- இதில் தமிழ் மொழி மற்றும் இலக்கிய வளர்ச்சிக்கும், தமிழ் சமுதாய உயர்வுக்கும் பங்காற்றிய தமிழறிஞர்களுக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் விருதுகளை வழங்கி கௌரவித்தார்.
- தமிழறிஞர்கள், தமிழ் அமைப்புகள், மாத இதழ் என மொத்தம் 21 பேருக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

**என்எல்சி, சோலார் எனர்ஜி நிறுவனங்களுடன் 2,900 மெ.வா. மின்சாரம் வாங்க டான்ஜெட்கோ ஒப்பந்தம் - முதல்வர் மு.க. ஸ்டாலின் முன்னிலையில் கையெழுத்து**

- சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க. ஸ்டாலின் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ் நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர் மானக் கழகம் (டான்ஜெட்கோ) ஒப்பந்தம் மேற்கொண்டது.
- என்எல்சி நிறுவனம் 800 மெகா வாட் திறன் கொண்ட 3 மின் உற்பத்தி அலகுகளை ஒடிசாவின் தலபிராவில் அமைக்கிறது. அதில் 11,500 மெகா வாட் தமிழகத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.
- இந்த திட்டத்தில் 2026 -27 -ல் உற்பத்தி தொடங்கும். நிலக்கரி சுரங்கத்துக்கு அருகில் இருப்பதால் என்எல்சி, யூனிட்டுக்குரூ.3.06 கட்டணம் நிர்ணயித்துள்ளது.
- 2026-27 முதல் 1,500 மெகா வாட் மின் கொள்முதல் செய்வது தொடர்பாக என்எல்சியுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.
- மேலும் டான்ஜெட்கோவுக்கு தனி நிலக்கரி சுரங்கம் ஒதுக்கப்படும் என்றும், 2,700 மெகாவாட் கூடுதல் மின்சாரம் தமிழகத்துக்கு ஒதுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- சோலார் எனர்ஜி கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா நிறுவன உற்பத்தியுடன் இணைக்கப்பட்ட திட்டத்தின் கீழ், தமிழகத்தின் புதுப்பிக்கத்தக்க மின் கொள்முதல் கொள்கை படி ஒரு யூனிட் ரூ.2.61 விலையில் 1,000 மெகா வாட் சூரிய மின் சக்தியை வாங்குவதற்கான ஒப்பந்தம் முதல்வர் முன்னிலையில் கையெழுத்திடப்பட்டது.
- இந்த மின்சாரம் 2022 -23- ம் ஆண்டு இறுதியில் கிடைக்கும். இதேபோல, பவர் டிரேடிங் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா நிறுவனத்துடன், 4 நடுத்தர கால மின் கொள்முதல் ஒப்பந்தங்கள் முதல்வர் முன்னிலையில் கையெழுத்தாகின.
- இதன் மூலம் 24 மணி நேரமும் 400 மெகா வாட் மின்சாரம், ஒரு யூனிட் ரூ.3.26 என்ற விலையில் கொள்முதல் செய்யப்படும்.
- இதன் ஒப்பந்தக் காலம் 3 ஆண்டுகள்.

**38 மாவட்டங்களில் "முதலமைச்சரின் பசுமைக் கூட்டுறவுத் திட்டம்" - தமிழக அரசு அரசாணை**

- தமிழகத்தில் 38 மாவட்டங்களில் "முதலமைச்சரின் பசுமை புத்தாய்வு திட்டம்" அமைப்பதற்கான அரசாணையை தமிழக அரசு வெளியிட்டுள்ளது.
- இயற்கையை பாதுகாக்க, கால நிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளை குறைக்க எளிய தொழில் நுட்ப முறைகளை வகுக்கும் திட்டத்திற்காக அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.
- சுற்றுச் சுழல் தொடர்பான செயல்பாடுகளில் இளைஞர்களை ஈர்க்கும் விதமாக தமிழக அரசு இத்தகைய நடவடிக்கை எடுத்துள்ளதாக கூறப்படுகிறது.

**மேகதாது அணைக்கு நிதி ஒதுக்கிய கர்நாடக அரசை கண்டித்து தமிழக சட்டப் பேரவையில் தீர்மானம் ஒரு மனதாக நிறைவேற்றம்**

- தமிழக சட்டப் பேரவையில், காவிரியின் குறுக்கே மேகதாதுவில் கர்நாடக அரசு அணை கட்டுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து தீர்மானம் கொண்டு வரப் பட்டது.
- தீர்மானத்தை நீர்வளத்துறை அமைச்சர் துரை முருகன் முன் மொழிந்தார்.



- இந்த தீர்மானத்தை உறுப்பினர்கள் அனைவரும் முழு மனதுடன் ஆதரிக்க வேண்டும் என்று அமைச்சர் துரை முருகன் கேட்டுக் கொண்டார்.
- இதையடுத்து, அமைச்சர் முன் மொழிந்த தீர்மானம் குரல் வாக்கெடுப்பு மூலம் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது.

**தமிழகத்தின் முதல் பெண் துபாஷ் ராஜலட்சுமி**

- தமிழக சட்டமன்றத்தில் (Tamilnadu Assembly) துபாஷ் என்ற பதவி ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இருந்து இன்று வரை தொடரும் ஒரு பணியாகும்.
- சட்டமன்ற வளாகத்தில் உள்ள சபாநாயகர் அறையில் இருந்து சட்ட மன்றம் வரை சபாநாயகர் செல்லும் போது முன்னே செல்லும் சபாநாயகரின் உதவியாளர், துபாய் என்று அழைக்கப்படுவார்.
- சபாநாயகர் பேரவையில் இருக்கும் போது பேரவைக்கு வெளியில் காத்திருப்பார் மீண்டும் சபாநாயகர் அவர் அறைக்குச் செல்லும் போது உடன் செல்வார் 1990 ஆம் ஆண்டு சட்டமன்ற அலுவலகத்தில் உதவியாளராக பணியில் சேர்ந்த ராஜ லட்சுமி என்பவர் இந்த பொறுப்பில் நியமிக்கப்பட்டுள்ளார்.
- இதற்கு முன் இந்த பொறுப்பில் ஆண்களே இருந்து வந்த நிலையில் பெண் ஒருவர் இந்த பொறுப்புக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளார்.




**சென்னை கிண்டி கிங் இன்ஸ்டிடியூட் வளாகத்தில் ரூ.230 கோடியில் பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை - மு.க. ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்**

- மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதியின் 97- வது பிறந்த நாளை முன்னிட்டு, 2021- ம் ஆண்டு ஜூன் 3- ம் தேதி வெளியிட்ட அறிவிப்பில், சென்னை கிண்டியில் உள்ள கிங் நோய் தடுப்பு மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் (கிங் இன்ஸ்டிடியூட்) ரூ.250 கோடி மதிப்பீட்டில் 500 படுக்கைகளுடன் கூடிய பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை அமைக்கப்படும் என்று முதல்வர் ஸ்டாலின் அறிவித்தார்.
- இதைத் தொடர்ந்து, சுகாதாரத் துறை சார்பில் பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை கட்டுவதற்காக கிங் இன்ஸ்டிடியூட் வளாகத்தில் 4.89 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டது.
- இந்நிலையில், பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனைக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார். பன்னோக்கு மருத்துவமனை கட்ட ரூ.230 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- தரை தளம் மற்றும் மேல் தளங்களுடன் 51,429 சதுர மீட்டர் பரப்பளவில் கட்டப்படவுள்ள இந்த மருத்துவமனையில் 1,000 படுக்கைகள் அமையவுள்ளன.

**"நன்செய் வரி, புஞ்சை வரி" - மதுரையில் 17 ம் நூற்றாண்டு வரி விதிப்பு கல்வெட்டு கண்டுபிடிப்பு**

- மருதங்குடி அருகே நாயக்கர் கால சத்திரங்களைப் பற்றி கள ஆய்வில் ஈடுபட்டிருந்த போது, அப்பகுதியில் நாயக்கர் கால கல்வெட்டு ஒன்று இருப்பதாக கிடைத்த தகவலின் பேரில் அக்கிராமத்தில் உள்ள சோமிகுளம் கண்மாய் கரையில் இருந்த கல்வெட்டை படியெடுத்து ஆய்வு செய்தனர். அந்த ஆய்வில் இக்கல்வெட்டு 4 அடி உயரமும், ஒரு அடி அகலமும் இரு புறமும் 24 வரிகளைக் கொண்டதாகவும் இருந்தது.

- ❖ இந்த கல்வெட்டில் ஊரின் பெயரும், சோமிகுளம் கண்மாய் பெயரும் குறிப்பிடப்பட்டு உள்ளதோடு கண்மாய் பகுதியில் உள்ள விளை நிலங்களுக்கு விவசாயம் அதிகமாக நடைபெறும் காலத்தில் நன்செய் வரி, மழைப் பொழிவு குறைந்து வறண்ட காலத்தில் புஞ்சை வரி என ஒரே நிலத்திற்கு இரு வகையான வரிகள் இப்பகுதியில் வசூலிக்கப்பட்டு நாயக்க அரசுக்கு இப்பகுதி வரி வசூலிப்பவர் மூலம் செலுத்தப்பட்டுள்ளது என்ற தகவல் இந்த கல்வெட்டில் கிடைத்து உள்ளதாகவும், இந்த வரியை வசூலிக்க காசடைய குடும்பத்திற்கு கட்டளை பிறப்பிக்கப்பட்டு இருந்ததாகவும், இந்த கல்வெட்டின் எழுத்தை கொண்டு பார்க்கும் போது இக்கல்வெட்டு 17 ம் நூற்றாண்டை சேர்ந்த நாயக்கர் காலத்துடையது எனவும் தெரிய வந்திருப்பதாக ஆய்வாளர்கள் கூறினர்.

**தமிழ் நாட்டைச் சேர்ந்த ஊக்கம் மிக்க 3 பெண்கள் நித்தி ஆயோக் - இன் 'இந்தியாவின் மாற்றத்திற்கான பெண்கள்' விருதுகளைப் பெற்றுள்ளனர்**

- ❖ 'வலிமையும், திறமையும் மிக்க இந்தியா' என மாற்றத்தை ஏற்படுத்துவதில் பெண்கள் தொடர்ந்து முக்கியப் பங்களிப்பு செய்து வருகின்றனர்.
- ❖ பல்வேறு துறைகளில் இத்தகைய பெண்களின் குறிப்பிடத்தக்க சாதனைகளுக்கு அங்கீகாரம் அளிக்கும் வகையில், நித்தி ஆயோக் இந்தியாவின் மாற்றத்திற்கான பெண்கள் விருதுகளை நிறுவியுள்ளது.




- ❖ இந்த ஆண்டு இந்திய சுதந்திரத்தின் 75- வது ஆண்டுப் பெருவிழாவின் பகுதியாக 75 பெண் சாதனையாளர்களுக்கு இந்த விருதுகள் வழங்கப்பட்டன.
  இவற்றில் 3 தமிழ் நாட்டைச் சேர்ந்த 3 பெண்கள் விருதுகளைப் பெற்றுள்ளனர்.
  1. வித்யா சுப்பிரமணியன் - சென்னை, வித்யா சுப்பிரமணியன் கல்வி நிறுவனம்
  2. டாக்டர் ரம்யா எஸ். மூர்த்தி - சென்னை, நிர்மயா இன்னவேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்
  3. தேவி பாலா உமா மகேஸ்வரன்- சென்னை, பிக்ஃபிக்ஸ் கேட்ஜெட் கேர் எல்எல்பி
- ❖ வித்யா சுப்பிரமணியன், சென்னை, வித்யா சுப்பிரமணியன் கல்வி நிறுவனம் - கர்நாடக இசை மற்றும் இதர பாரம்பரிய இந்திய கலைகளை இணையம் வழியாக கற்பிக்கும் பணியில் தம்மை அர்ப்பணித்துக் கொண்டுள்ள வித்யா சுப்பிரமணியன், வீட்டிலிருந்து பணி செய்யும் வாய்ப்புகள் மூலம் சுமார் 100 பெண் கலைஞர்கள் மற்றும் ஆசிரியைகள் திறன் பெற உதவி செய்துள்ளார்.
- ❖ டாக்டர் ரம்யா எஸ். மூர்த்தி, சென்னை, நிர்மயா இன்னவேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட். நாடு முழுவதும் நூற்றுக்கணக்கான சிறார்களுக்கு பணியாற்றி வரும் டாக்டர் ரம்யா 60 சதவீதத்திற்கும் அதிகமானவர்களுக்கு கற்றல் வேகத்தை அளித்து வருகிறார். நிர்மயா இன்னவேஷன்ஸ் என்பது அவரது நிபுணத்துவம் மற்றும் 5 ஆண்டு ஆராய்ச்சியின் விளைவாகும். ஆட்டிசம் பாதித்த மற்றும் பல வகை பாதிப்புள்ள நபர்களுக்கு உதவி செய்ய சுப்ரயோகா என்ற ரோபோ அடிப்படையிலான பயிற்சிக் கருவிகளை நிர்மயா உருவாக்கி உள்ளார்.
- ❖ தேவிபாலா உமா மகேஸ்வரன், சென்னை, பிக்ஃபிக்ஸ் கேட்ஜெட் கேர் எல்எல்பி. தேவி பாலா உமா மகேஸ்வரனால் நிறுவப்பட்ட பிக்ஃபிக்ஸ் கேட்ஜெட் கேர் எல்எல்பி 2012 முதல் செயல்பட்டு வருகிறது. தற்போது பிக்ஃபிக்ஸ் என்பது செல்பேசிகள், மடிக் கணினிகள், மேசைக் கணினிகள், டேப்லட்டுகள் ஆகியவற்றுக்கு குறைந்த செலவில் பழுது நீக்குவதில் முதன்மை நிறுவனமாக உள்ளது.

**ஊட்டச்சத்து திட்டத்தின் கீழ் தமிழகத்துக்கு ரூ.250 கோடி ஒதுக்கீடு**

- நாட்டில் ஊட்டச்சத்து குறைபாட்டை போக்க, ஊட்டசத்து திட்டம் கடந்த 2018 ம் ஆண்டு, மார்ச் 8ம் தேதி தொடங்கப்பட்டது.
- 6 வயது வரை உள்ள குழந்தைகள், வளர் இளம் பெண்கள், கர்ப்பினி பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய் மார்கள் ஆகியோரின் ஊட்டச்சத்து நிலவரத்தை மேம்படுத்துவதை இத்திட்டம் நோக்கமாக கொண்டுள்ளது.
- ஊட்டச்சத்து திட்டத்தின் கீழ் 2022 ஜனவரி 1 ம் தேதி வரை மாநிலங்களுக்கு வழங்கப்பட்ட மொத்த நிதி மற்றும் செலவிடப்பட்ட நிதி விவரங்கள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. தமிழகத்துக்கு ரூ. 250 கோடியே 60 லட்சத்து 44 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது.
- இதில் ரூ.218 கோடியே 79 லட்சத்து 36 ஆயிரத்தை தமிழகம் பயன்படுத்தியுள்ளது.

**சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகளாக என். மாலா, எஸ். சவுந்தரை நியமித்து குடியரசுத் தலைவர் உத்தரவு**

- சென்னை உயர் நீதிமன்றத்தில் காலியாக உள்ள நீதிபதிகள் பணியிடத்துக்கு அரசு மற்றும் அரசு சாராத வழக்கறிஞர்களாக பணியாற்றி வரும் என். மாலா, எஸ். சவுந்தர், சுந்தர் மோகன், கே. குமரேஷ் பாபு, அப்துல் ஹமீத், ஆர். ஜான் சத்யன் ஆகிய 6 பேரையும் நீதிபதிகளாக நியமிக்க உச்ச நீதிமன்ற கொலீஜியம் கடந்த மாதம் மத்திய அரசுக்கும், குடியரசுத் தலைவருக்கும் பரிந்துரை செய்திருந்தது.
- அதன் படி, இதில் முதற்கட்டமாக என். மாலா, எஸ். சவுந்தர் ஆகியோரை சென்னை உயர் நீதிமன்றத்தின் கூடுதல் நீதிபதிகளாக நியமித்து குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் உத்தரவிட்டுள்ளார். இவர்கள் இருவரும் விரைவில் கூடுதல் நீதிபதிகளாக பதவியேற்க உள்ளனர்.

**தமிழ் நாட்டுக்கு வெளியே வாழும் தமிழர்களுக்கான சட்ட மசோதா நிறைவேறியது.**

- 2011 -ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட தமிழ் நாட்டுக்கு வெளியே வாழும் தமிழர்கள் நலச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்வதற்கான சட்ட மசோதாவை சட்ட சபையில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் தாக்கல் செய்தார்.
- அதில், தமிழ் நாட்டை வாழ்விடமாகக் கொள்ளாத தமிழர்களின் நலனை உறுதி செய்யவும், ஓய்வூதியம் உள்ளிட்ட பிற பலன்களை வழங்குவதற்கான நிவாரணத்தை அளிக்கவும், நல வாரியம் ஒன்றை அமைக்க 2011 -ம் ஆண்டு முடிவு செய்யப்பட்டு இருந்தது.
- அதன் படி, தமிழ் நாட்டில் வாழாத தமிழர்களின் நலனுக்காக கூட்டுறவு சங்கங்கள் அல்லது வேறு நிறுவனங்களை ஊக்குவிப்பதற்காக தமிழ் நாட்டுக்கு வெளியே வாழும் தமிழர்கள் நலச் சட்டம் உருவாக்கப்பட்டது.
- தற்போது, சங்கமாக இருந்ததை வாரியமாக மாற்றியுள்ளதால் அதிலுள்ள பதவிகளையும் அதற்கேற்ற வகையில், தலைவர், உறுப்பினர் என்று மாற்றுவதாகவும், வாரியத்தின் உறுப்பினர் எண்ணிக்கையை 13- ல் இருந்து 15- ஆக உயர்த்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.
- தமிழ் நாட்டில் வசிக்காத தமிழர்கள் மறுவாழ்வு மற்றும் நலன் ஆணையரை அந்த வாரியத்தின் உறுப்பினர் செயலாளராக பதவி வகிக்கவும் அரசு முன்மொழிந்துள்ளது. அதன்படி, இந்த மாற்றங்களை மேற்கொள்வதற்கு வசதியாக இந்த சட்டத் திருத்த மசோதா தாக்கல் செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**துபாய் எக்ஸ்போ, தமிழ்நாடு அரங்கு - முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் திறப்பு.**

- புதிய முதலீடுகளை ஈர்க்கும் பொருட்டு துபாயில், எக்ஸ்போ கண்காட்சி கடந்த வருடம் அக்டோபர் 1ம் தேதி தொடங்கி வரும் 31ம் தேதி வரை நடைபெறுகிறது.
- கண்காட்சியின் கடைசி வாரம், தமிழ்நாடு வாரமாக அனுசரிக்கப்படுகிறது. இதனையொட்டி. எக்ஸ்போ கண்காட்சியில் இடம் பெற்றுள்ள தமிழ்நாடு அரங்கை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்.
- இந்த அரங்கில் தமிழ் நாடு கலாச்சாரம் மற்றும் பண்பாட்டை விளக்கும் சிலைகள், வீடியோ காட்சிகள் இடம் பெற்றுள்ளன. இதனைத் தொடர்ந்து கண்காட்சியில் இடம் பெற்ற கலை நிகழ்ச்சிகள் பார்வையாளர்கள் கவனத்தை வெகுவாக கவர்ந்தது.
- இந்நிலையில், துபாயில் உள்ள உலகின் மிக உயரமான புர்ஜ் கலீபா கட்டிடத்தில் தமிழரின் பண்பாட்டையும் பெருமையையும் பறை சாற்றும் வகையில் கீழடியின் காணொலி காட்சி ஒளிபரப்பப்பட்டது.
- அப்போது இடம் பெற்ற செம்மொழியான தமிழ் மொழி பாடலையும், அதில் இடம் பெற்ற தொல் தமிழர் பெருமையை உலகிற்குப் பறை சாற்றும் வகையிலான காட்சிகளையும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் ஆர்வமுடன் ரசித்துப் பார்த்தார்.




**உள்ளாட்சி அமைப்புகளுக்கு ரூ.614 கோடி ஒதுக்கீடு செய்து அரசாணை வெளியீடு.**

- தமிழ்நாட்டு உள்ளாட்சி அமைப்புகளுக்கு 5 -வது மாநில நிதி ஆணையம் மூலம் ரூ.614 கோடி ஒதுக்கீடு செய்து அரசாணையை வெளியிட்டது தமிழக அரசு.
- இதுபோன்று, தமிழ்நாட்டில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்காக அடிப்படை மானியமாக 15-வது மத்திய நிதி ஆணையத்தின் மூலமாக ரூ.799 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டதற்கான அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.
- அதன் படி, கிராம ஊராட்சிகளுக்கு ரூ.639 கோடியும், ஒன்றியங்களுக்கு ரூ.119 கோடியும், மாவட்ட ஊராட்சிகளுக்கு ரூ.39 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- உள்ளாட்சி அமைப்புகளில் மேற்கொள்ள வேண்டிய அடிப்படை வசதிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

**துபாயில் முதல்வர் மு.க. ஸ்டாலின் முன்னிலையில் ரூ. 2,600 கோடி முதலீட்டுக்கு ஒப்பந்தம்.**

- துபாயில் நடைபெற்ற ஐக்கிய அரபு நாடுகளின் முதலீட்டாளர்கள் சந்திப்பின் போது, துபாயைச் சேர்ந்த ஒயிட் ஹவுஸ் நிறுவனம் ரூ.500 கோடி முதலீட்டில் 3,000 பேருக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தும் வகையில் இரு ஒருங்கிணைந்த தையல் ஆலைகள் நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.
- நோபுள் ஸ்டீல்ஸ் நிறுவனம் ரூ. 1,000 கோடி முதலீட்டில் 1,200 நபர்களுக்கு வேலை வாய்ப்பும் டிரான்ஸ்வேல்டு குழுமம் ரூ.100 கோடி முதலீட்டில் 1,000 பேருக்கு வேலை வாய்ப்பும் ஆஸ்டர் டிஎம் ஹெல்த்கேர் அமைப்பு ரூ.500 கோடி முதலீட்டில் 3,500 நபர்களுக்கு வேலை வாய்ப்பும் ஷெராப் குழும நிறுவனம் ரூ.500 கோடி முதலீட்டில் 1,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையிலும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

- இந்தியாவிலேயே முதல் முதலாக தூத்துக்குடி துறைமுகத்தில் சர்வதேச அறைகலன் பூங்காவுக்கு (பர்னிச்சர் பார்க்) அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.
- அடிக்கல் நாட்டிய அன்றே, 375 மில்லியன் டாலர் அளவுக்கு முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளன.
- கரோனா பெருந்தொற்று நேரத்திலும் கடந்த 10 மாதங்களில் மட்டும் 800 கோடி டாலர் முதலீடுகளை ஈர்க்கும் வகையில் 120 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டு, புதிதாக 2 லட்சம் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.
- கடந்த 2020 – 2021 -ம் நிதி ஆண்டில் தமிழகத்தின் ஒட்டு மொத்த வளர்ச்சி 5.8 சதவீதமாக இருந்தது.

**தூத்துக்குடி உட்பட 21 இடங்களில் சைனிக் பள்ளி - ஒன்றிய அரசு ஒப்புதல்**

- பிரதமர் மோடியின் தொலை நோக்கு பார்வையில் உருவான இத்திட்டத்தில் முதல் கட்டமாக 21 புதிய சைனிக் பள்ளிகள் தொடங்க பாதுகாப்பு அமைச்சகம் அனுமதி வழங்கியது. தனியார் துறையுடன் இணைந்து 21 புதிய சைனிக் பள்ளிகள் தொடங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. இதில் 7 பள்ளிகள் வழக்கமான பள்ளிகளாகவும், 14 பள்ளிகள் உண்டு உறைவிட பள்ளிகளாகவும் இருக்கும்.




- புதிய சைனிக் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை 6 ம் வகுப்பு முதல் இருக்கும்' என கூறப்பட்டுள்ளது. இதில் தமிழகத்தில் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள தனியார் பள்ளி ஒன்றுடன் இணைந்து சைனிக் பள்ளி அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது

**சர்வதேச புகைப்பட விருதை பெறும் தமிழர் செந்தில் குமரன்**

- பிரபல போட்டோகிராபர் செந்தில் குமரன் மதுரையை சேர்ந்தவர்.
- இவர் போட்டோகிராபி துறையில் பல அசத்தல்களை நிகழ்த்தி வருகிறார்.
- இவர் பெற்ற விருதுகளின் வரிசையில் முக்கியமான விருதுகளின் வரிசையில், 2007ம் ஆண்டு, லண்டன் ராயல் ஜியாகிரபிகல் சொசைட்டியின் சிறந்த புகைப்படக் கலைஞருக்கான விருது கிடைத்தது.
- மேலும், மற்றொரு ஐகானிக் புகைப்படமான கங்கை ஆற்றின் கரையோரம் காயப் போடப்பட்டிருந்த சேலைகளின் புகைப்படமானது வைலானது. அதை அவர் ராயல் ஜியாகிரபிகல் சொசைட்டியின் சிறந்த புகைப்படத்திற்கான போட்டிக்கு அனுப்பி வைத்தார்.
- இந்நிலையில், வன விலங்கு சார்பாக அவர் எடுத்த புகைப்படத்திற்கு தற்போது ஒரு விருது கிடைந்துள்ளது.
- வேர்ல்டு பிரஸ் போட்டோ என்ற அமைப்பின் பத்திரிகை புகைப்பட கலைஞருக்கான விருதை இவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
- சர்வதேச விருதை தமிழர் ஒருவர் வெல்வது இதுவே முதல் முறை ஆகும்.

**தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக கீதாலட்சுமி நியமனம் - ஆளுநர் ஆர். என். ரவி உத்தரவு**

- தமிழக ஆளுநரும், கோவை வேளாண் பல்கலைக்கழக வேந்தருமான ஆர். என். ரவி, அப்பல்கலைக்கழக துணைவேந்தராக வி. கீதா லட்சுமியை நியமித்துள்ளார்.
- அவர் துணை வேந்தராகப் பதவி ஏற்கும் நாளில் இருந்து 3 ஆண்டுகள் அப்பதவியில் இருப்பார்.

- 15 ஆய்வுக் கட்டுரைகள் வெளியிட்டுள்ள கீதா லட்சுமி, 11 புத்தகங்கள் எழுதியுள்ளார். மேலும், 33 ஆராய்ச்சித் திட்டங்களையும் செயல்படுத்தியுள்ளார்.

**வெள்ள நிவாரணமாக தமிழகத்திற்கு ரூ.352 கோடி ஒதுக்கீடு**

- 2021 ஆம் ஆண்டில் வெள்ளப்பெருக்கு நிவாரண நிதியாக தமிழ்நாடிற்கு மத்திய அரசு ரூ.352.85 கோடி வழங்கியுள்ளது.
- கூடுதல் நிதி வழங்கப்பட்ட ஐந்து மாநிலங்கள் ஆந்திர பிரதேச மாநிலத்திற்கு ரூ.351. 43 கோடி ரூபாயும், இலாமச்சல பிரதேசத்திற்கு ரூ.112.19 கோடியும், கர்நாடக மாநிலத்திற்கு ரூ.429.39 கோடியும், மஹாராஷ்டிர மாநிலத்திற்கு ரூ.355.39 கோடியும் புதுச்சேரி மாநிலத்திற்கு ரூ.17.86 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

**முதல்வர் ஸ்டாலின் முன்னிலையில் ரூ.3500 கோடி முதலீட்டில் புரிந்துணர்வு ஒப்பந்தம்**

- தற்போது துபாய் சுற்றுப் பயணம் சென்றுள்ள தமிழ் நாடு முதல்வர் மு. க. ஸ்டாலின் முன்னிலையில் இன்று ரூ.3500 கோடி முதலீட்டியில் 3 திடங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.
- தமிழகத்தில் திமுக ஆட்சிப் பொறுக்கு வந்த பின்னர் அந்நிய நேரடி முதலீடு அதிகரித்துள்ளதாவும் 2021 ஏப்ரல் முதல் டிசம்பர் வரை முதலீடு 41.55 அதிகரித்துள்ளதாக மத்திய தொழில் துறை அமைச்சக புள்ளி விபரத்தில் தெரிய வந்துள்ளது.

**20,000 பசுமை வீடுகள் கட்ட ரூ.299 கோடி நிதி விடுவிப்பு - தமிழக அரசு அரசாணை**

- "2021-22 ஆம் ஆண்டிற்கான பட்ஜெட் மதிப்பீட்டில் சூரிய சக்தியால் இயங்கும் முதலமைச்சரின் பசுமை இல்லத் திட்டத்தின் (CMGHS) கீழ் டோக்கன் மட்டுமே வழங்கப்படுகிறது என்றும், எனவே, 2021-22 ஆம் ஆண்டிற்கான முதலமைச்சரின் பசுமை வீடு திட்டக்கை (CMGHS) செயல்படத்த முதற்கட்டமாக ரூ.299 கோடியை அரசு அனுமதித்து விடுவிக்குமாறு ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் இயக்குநர் கோரிக்கை விடுத்துள்ளார்.
- இந்நிலையில், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் இயக்குனரின் முன்மொழிவை விரிவாக ஆய்வு செய்த பிறகு, 2021-2022 ஆம் ஆண்டிற்கான முதலமைச்சரின் பசுமை வீடு திட்டத்தின் (CMGHS) கீழ் ரூ.299 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அரசு அனுமதி அளித்து அரசாணை வெளியிட்டுள்ளது.

**தமிழக அமைச்சரவையில் முதல் மாற்றம்**

- தமிழகத்தில் கடந்த 2021- ம்ஆண்டு நடை பெற்ற சட்டப் பேரவை பொதுத் தேர்தலில் திமுக வெற்றி பெற்று, முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமையில் 34 பேர் கொண்ட அமைச்சரவை மே.7-ம் தேதி பொறுப்பேற்றது.
- இந்நிலையில் 10 மாதங்கள் கழித்து தமிழக அமைச்சரவையில் முதல் மாற்றம் நிகழ்ந்துள்ளது.
- அமைச்சரவையில் குறிப்பிட்ட இரு அமைச்சர்களின் துறைகள் மாற்றப்பட்டுள்ளன. முதல்வரின் பரிந்துரையின் அடிப்படையில், ஆர். எஸ். ராஜகண்ணப்பன் வகித்து வந்த போக்குவரத்து, தேசிய போக்குவரத்து மற்றும் மோட்டார் வாகன சட்டத் துறையானது, எஸ். எஸ். சிவ சங்கருக்கு ஒதுக்கப்படுகிறது.
- அதே போல், பிறபடுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறையானது சிவசங்கருக்கு பதில் ஆர். எஸ். ராஜ கண்ணப்பனுக்கு வழங்கப்படுகிறது.

**மதுரை காமராஜ் பல்கலை புதிய துணை வேந்தர் குமார்**

- மதுரை காமராஜ் பல்கலை துணை வேந்தராக, பேராசிரியர் குமாரை நியமனம் செய்து, கவர்னர் ரவி உத்தரவிட்டார். இதற்கான ஆணையை அவரிடம் வழங்கினார்.

❖ மூன்று ஆண்டுகள் அப்பதவியில் இருப்பார். புதிய துணை வேந்தர் குமார், அண்ணா பல்கலையில் இயற்பியல் புலத்தின் படிக வளர்ச்சி எனப்படும், 'கிரிஸ்டல் குரோத்' துறை தலைவராகப்பணியாற்றி வந்தார்.

❖ பல்கலைகளில் அடிப்படை அறிவியல் ஆராய்ச்சிகளை வலுப்படுத்தும் திட்ட அதிகாரியாக உள்ளார்.

**சென்னை சென்ட்ரலில் மத்திய சதுக்கம் திறந்து வைத்த முதல்வர்.**

❖ சென்னை சென்ட்ரல் பகுதியில் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் நிதியுதவியுடன் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தால் செயல்படுத்தப்படும் உலகத் தரம் வாய்ந்த பன்முக போக்குவரத்து ஒருங்கிணைப்பு திட்டமான மத்திய சதுக்கத் திட்டத்தின் கீழ் ரூ 34.22 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அழகுப்படுத்தப்பட்ட நில மேம்பாட்டு வசதிகள் மற்றும் சுரங்க நடை பாதையை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.

❖ அழகுப்படுத்தப்பட்ட நில மேம்பாட்டு வசதிகள் நிறைந்த வெளிப்பகுதி, நடந்து செல்பவர்களுக்கு பாதுகாப்பாகவும் வசதியாகவும் மேம்படுத்தப்பட்டு மரங்கள், புல்வெளி மற்றும் அழகிய தாவரங்களுடன் அலங்கரிக்கப்பட்டுள்ளது.




**தமிழ் நாடு மாநில சுகாதாரப் பேரவையை தமிழக முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார்**

❖ சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில், தமிழ்நாடு சுகாதார சீரமைப்புத் திட்டத்தின் கீழ், தமிழ்நாடு மாநில சுகாதாரப் பேரவையை தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் மார்ச் 30 தொடங்கி வைத்தார்.

❖ தமிழக மக்களின் சுகாதார தரத்தினை மேம்படுத்தும் பொருட்டு உலக வங்கியின் துணையுடன் தமிழ்நாடு சுகாதார சீரமைப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

❖ இத்திட்டத்தின் ஓர் அம்சமாக, சுகாதார கொள்கை வகுப்பதில் குடி மக்களின் ஈடுபாட்டை மேலும் மேம்படுத்தும் நோக்கில் மாவட்ட மற்றும் மாநில அளவில் சுகாதாரப் பேரவை கூட்டங்கள் நடத்தப்படுகின்றன.

❖ இப்பேரவையை தொடங்கி வைக்க தமிழ் நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனைக்கு வருகை புரிந்த போது, தமிழக முதல்வர், கர்ப்பிணி தாய்மார்களுக்கான ஆரம்ப நிலை கரு வளர்ச்சி குறைபாடுகளை கண்டறிந்திட ஒரு கோடி ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள மருத்துவக் கருவிகளின் சேவையை தொடங்கி வைத்தார்.

**வன்னியருக்கான 10.5% உள் இடஒதுக்கீடு செல்லாது - சென்னை உயர் நீதிமன்ற தீர்ப்பை உறுதி செய்தது உச்ச நீதிமன்றம்**

❖ வன்னியர்களுக்கான 10.5 சதவீத உள் இட ஒதுக்கீடு செல்லாது என்று சென்னை உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பை உறுதி செய்த உச்ச நீதிமன்றம், இது தொடர்பாக தமிழக அரசு மற்றும் பாமக தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மேல் முறையீட்டு மனுக்களை தள்ளுபடி செய்தது.

❖ தமிழகத்தில் நடைமுறையில் உள்ள 69 சதவீத இட ஒதுக்கீட்டில், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு (எம்பிசி) 20 சதவீத இட ஒதுக்கீடு வழங்கப்படுகிறது.

- இந்நிலையில், கடந்த ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலுக்கு முன்பாக பிப்ரவரியில் எம்பிசி பிரிவில் உள்ள வன்னியர் சமுதாயத்துக்கு கல்வி, வேலை வாய்ப்பில் 10.5 சதவீத உள் இட ஒதுக்கீடு வழங்கி அப்போதைய அதிமுக ஆட்சியில் சட்டம் கொண்டு வரப்பட்டது.

**100 நாள் வேலை திட்டம் ரூ.949 கோடி ஒதுக்கீடு**

- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தின்படி 100 நாள் வேலை திட்டத்திற்காக 2021- 22ம் ஆண்டுக்கான நிதியை ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று ஊரக வளர்ச்சி துறை இயக்குனர் அரசுக்கு கோரிக்கை வைத்திருந்தார்.
- அந்த கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்திற்காக இந்த நிதியாண்டு தமிழக அரசு ரூ.949 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டதற்கான அரசாணையை வெளியிட்டுள்ளது.
- அதன் படி, தமிழகத்தில் நடைபெறும் 100 நாள் வேலை திட்டத்திற்கு ஒன்றிய அரசு சார்பில் 75 சதவீத நிதியாக ரூ.674.84 கோடியும், மாநில அரசு சார்பில் 25 சதவீத நிதியாக ரூ.224.94 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

**தமிழக அமைச்சரவை மாற்றம் மார்ச் 2022:**

- போக்குவரத்துத் துறை அமைச்சர் ராஜ கண்ணப்பனின் துறை மாற்றம் செய்யப்பட்டுள்ளது.
- பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சராக இருந்த எஸ். எஸ். சிவ சங்கர் போக்குவரத்துத் துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த ராஜ கண்னப்பன் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

**நீர் மேலாண்மையில் தேசிய அளவில் தமிழ்நாடு 3 வது இடம் பெற்றுள்ளது.**

- மத்திய ஜல்சக்தி துறை அமைச்சகம் சார்பில் ஆண்டு தோறும் வழங்கப்படும் இந்த விருதுகளில் முதல் இரண்டு இடங்களை முறையே உத்தரப்பிரதேசம் மற்றும் ராஜஸ்தான் மாநிலங்கள் பெற்றுள்ளன.

**சிறந்த கிராமப் பஞ்சாயத்து (தென்மண்டல அளவில்)**

- செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள வெள்ளப்புதூர் ஊராட்சி இரண்டாம் இடத்திற்கான விருதும், சிறந்த நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு பிரிவில் மதுரை மாநகராட்சி 3 வது இடத்திற்கான விருதும், சிறந்த பள்ளிகள் பிரிவில், கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப் பட்டினம் பெண்கள் மேல்நிலைப் பள்ளி முதல் இடத்திற்கான விருதும் பெற்றன.

**எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதி, சாகித்திய அகாதெமியின் உயரிய ஃபெல்லோஷிப் அங்கீகாரம் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.**

- எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதி, சாகித்திய அகாதெமியின் உயரிய ஃபெல்லோஷிப் அங்கீகாரம் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.
- இலக்கியத்துக்கு நீண்ட காலமாகத் தொண்டாற்றிய எழுத்தாளர்களுக்கு வழங்கப்படும் சாகித்திய ஃபெல்லோஷிப் அங்கீகாரம் இதற்கு முன்னர் தமிழகத்தைச் சேர்ந்த ராஜாஜி, தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், கே. ஆர். சீனிவாச ஐயங்கார், ஜெய காந்தன் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது.
- தஞ்சையில் செயல்பட்டு வரும் தமிழ்த் தாய் அறக்கட்டளை என்ற அமைப்பின் மூலம் நான்காவது உலகத் திருக்குறள் மாநாடு கர்நாடக மாநிலம், மைசூரில் 25,26 மார்ச் 2022 தினங்களில் நடைபெறவுள்ளது.

**"மூப்பில்லா தமிழே தாயே" ஆல்பம்:**

❖ ஏ. ஆர். ரகுமான் இசையில் 'மூப்பில்லா தமிழே தாயே' என்ற இசை ஆல்பம் வெளியிடப்பட்டுள்ளது.

❖ புதிய கலைஞர்களை அறிமுகப்படுத்தும் நோக்கத்தில் ஏ. ஆர். ரகுமான் தொடங்கிய மாஜா தளத்தின் மூலம் தயாரிக்கப்பட்டுள்ள இந்த பாடலுக்கு பாடலாசிரியர் தாமரை வரிகளை எழுதியுள்ளார்.

❖ தமிழின் தொன்மையையும், பெருமையையும் பறை சாற்றும் விதமாக இப்பாடல் உருவாகியுள்ளது.

❖ ஏற்கெனவே முன்னாள் முதல்வரும், கவிஞருமான கருணாநிதி வரிகளில் செம்மொழியான தமிழ் மொழியே பாடலை ஏ. ஆர். ரகுமான் இசையமைத்து வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

**பிரதான் மந்திரி மத்ஸ்ய சம்பதா யோஜனா *(Pradhan Mantri Matsya Sampada Yojana)***

❖ பிரதான் மந்திரி மத்ஸ்ய சம்பதா யோஜனா திட்டத்தின் கீழ் தமிழ் நாட்டில் கன்னியாகுமரி மாவட்டம் குளச்சல், தேங்காய் பட்டினம், நாகப்பட்டினம் மாவட்டம் பூம்புகார், ராமநாதபுரம் மாவட்டம் மூக்கையூர் ஆகிய இடங்களில் மீன் பிடி துறைமுகம் அமைப்பதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

❖ கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள சின்னமுட்டம் மீன் பிடித் துறைமுகத்தை விரிவாக்கம் செய்வதற்கும், ராமநாதபுரம் மாவட்டம் குந்துக்கல்லில் மீன் பிடி இறங்கு தளம் அமைப்பதற்கும் மத்திய அரசின் நிதியுதவியுடன் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

❖ இதற்கான மதிப்பீடு செய்யப்பட்ட தொகையான 65,930.35 இலட்சம் ரூபாயில் 65,772.10 இலட்சம் ரூபாய் அளிக்கப்பட்டுள்ளது. இதில் 65,291.99 இலட்சம் ரூபாய் பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்துப் பணிகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

❖ பிரதான் மந்திரி மத்ஸ்ய சம்பதா யோஜனா (Pradhan Mantri Matsya Sampada Yojana) திட்டம் 2020 - 21 நிதியாண்டு முதல் 2024 - 25 நிதியாண்டு வரையிலான 5 வருட காலத்திற்கு ரூ. 20050 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படவுள்ளது. இதில் மத்திய அரசின் பங்கு 9407 கோடி, மாநில பங்கு ரூ. 4880 கோடிகள் மற்றும் பயனாளிகளின் பங்களிப்பு ரூ. 5763 கோடிகளாகும்.

**கும்பகோணம் அருகே உள்ள நரசிங்கம் பேட்டை நாகசுரத்துக்கு புவிசார் குறியீடு கிடைத்துள்ளது.**

❖ கும்பகோணத்துக்கு அருகில் உள்ள "நரசிங்கம் பேட்டை " கைவினைக் கலைஞர் என்.ஜி. என். அரங்கநாத ஆசாரி 1955 ஆம் ஆண்டில் சுத்த மத்தியமம் ஸ்வரத்தை கண்டுபிடித்து, அதை நாக சுரக் கருவியில் உருவாக்கினார்.

❖ திராவிடர்களின் இசைக் கருவியான இந்த நரசிங்கப் பேட்டை நாக சுரத்தை செய்வதற்கு மரங்களில் வலிமையான ஆச்சா மரம் பயன்படுத்தப்படுகிறது.

**'நம்ம ஊரு திருவிழா' என்ற பெயரில் கலாச்சார திருவிழா சென்னை தீவுத் திடலில் 21.3.2022 அன்று நடைபெற்றது.**

❖ கலைப் பண்பாட்டுத் துறை மற்றும் சுற்றுலாத் துறை இணைந்து இதை நடத்தியுள்ளன. இந்த விழா 75 வது சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாகும்.



- தமிழ் நாட்டில் உள்ள நரிக்குறவர், குருவிக்காரர் சமூகத்தினரை பழங்குடியினர் பட்டியலில் சேர்த்திட விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதமர் மோடிக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.
- அனைத்து புத்தகங்களையும் ஒரே இடத்தில் விற்பனை செய்யும் வகையில் தமிழகத்தில் புத்தகப் பூங்கா அமைக்க நிலம் வழங்கப்படும் என முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**தமிழ் நாடு அரசின் பால்வளத் துறை**

- தமிழ் நாடு அரசின் பால்வளத் துறை சார்பில் மதுரை பால் பண்ணை வளாகத்தில் 65 கோடியே 89 இலட்சம் ரூபாய் செலவில், நாளொன்றுக்கு 30,000 லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட ஆவின் நிறுவனத்தின் புதிய ஐஸ்கிரீம் தொழிற்சாலையை காணொலிக் காட்சி வாயிலாக முதலமைச்சர் அவர்கள் 14.3.2022 அன்று திறந்து வைத்தார்கள்.

**தமிழக அரசின் சார்பில் தமிழ் அறிஞர்களுக்கான பல்வேறு விருதுகள் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களால் வழங்கப்பட்டது.**

- தமிழக அரசின் சார்பில் தமிழ் அறிஞர்களுக்கான பல்வேறு விருதுகள் 15.3.2022 அன்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களால் வழங்கப்பட்டது. அவற்றின் விவரம் வருமாறு,
- 2022 ஆம் ஆண்டிற்கான தமிழ் வளர்ச்சித் துறையின் திருவள்ளுவர் விருது - மறைந்த திரு. மு. மீனாட்சி சுந்தரம்




- 2021 ஆம் ஆண்டிற்கான, பேரறிஞர் அண்ணா விருது - திரு. நாஞ்சில் சம்பத்
- பெருந்தலைவர் காமராசர் விருது - முனைவர் குமரி அனந்தன்
- மகாகவி பாரதியார் விருது - திரு. பாரதி கிருஷ்ணகுமார்
- பாவேந்தர் பாரதிதாசன் விருது - புலவர் செந்தலை கவுதமன்
- முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் விருது - முனைவர் ம. இராசேந்திரன்
- கம்பர் விருது - திருமதி பாரதி பாஸ்கர்
- சொல்லின் செல்வர் விருது - திரு. சூர்யா சேவியர்
- ஜி.யு. போப் விருது - திரு. அ.சு. பன்னீர் செல்வன்
- உமறுப்புலவர் விருது - திரு நா. மம்மது
- இளங்கோவடிகள் விருது - திரு. நெல்லை கண்ணன்
- சிங்காரவேலர் விருது - கவிஞர் மதுக்கூர் இராமலிங்கம்
- மறைமலையடிகளார் விருது - திரு. சுகி. சிவம்
- அருட்பெருஞ்சோதி வள்ளலார் விருது - முனைவர் இரா. சஞ்சீவிராயர்
- அயோத்தி தாசப் பண்டிதர் விருது - திரு. ஞான அலாய்சியஸ்
- பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் 2021 ஆம் ஆண்டிற்கான தந்தை பெரியார் விருது - திரு. க. திருநாவுக்கரசு
- ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் 2021 ஆம் ஆண்டிற்கான டாக்டர் அம்பேத்கர் விருது - நீதியரசர் சந்துரு
- செந்தமிழ் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்ட இயக்ககத்தின் தேவ நேயப்பாவாணர் விருது - முனைவர் கு. அரசேந்திரன்

- *2021 ஆம் ஆண்டிற்கான தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார் திங்களிதழ் விருது - உயிர்மை திங்களிதழ்*
- *தமிழ்த் தாய் விருது - மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம்*
- *2020 ஆம் ஆண்டிற்கான முதலமைச்சர் கணினித் தமிழ் விருது - முனைவர் வ. தன லட்சுமி*
- *சென்னை தரமணியில் ரூ. 5,000 கோடி செலவில் மிகப் பெரிய ஐ.டி. வளாகத்துக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் 14.3.2022 அன்று அடிக்கல் நாட்டினார். இந்த டி. எல். எப். டௌன்டவுன் தரமணியில் "ஸ்டாண்டர்டு சார்ட்டர்டு குளோபல் பிசினஸ் சர்வீசஸ்"- ன் மிகப் பெரிய உலகளாவிய வளாகம் ரூ. 5,000 கோடி முதலீட்டில் 6.8 மில்லியன் சதுரஅடி பரப்பில், 27 ஏக்கர் நிலப் பரப்பில் அமையவுள்ளது.*
- *மெல்லிசை மன்னர் எம். எஸ். விஸ்வநாதனுக்கு நினைவிடம் கட்ட ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு செய்து கேரள அரசு உத்தரவிட்டுள்ளது.*






















தமிழ் adda247
DAILY CURRENT AFFAIRS IN TAMIL
for TNPSC Group 1, TNPSC Group 2/2A, TNPSC Group 4, TNUSRB, TNFUSRC, IBPS, SSC, IBPS RRB, SBI, RRB, UPSC etc.


தமிழ் adda247
BEST ARTICLES IN TAMIL FOR EXAM PREPARATION
for TNPSC Group 1, TNPSC Group 2/2A, TNPSC Group 4, TNUSRB, TNFUSRC, IBPS, SSC, IBPS RRB, SBI, RRB etc.
ARTICLE


தமிழ் adda247
DOWNLOAD
Admit Card


தமிழ் adda247
ARTICLES
IN TAMIL